**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை–மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு நலத் திட்டங்கள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மாவட்ட அளவில் கலை நிகழ்வுகள் மற்றும் தெருமுனை நாடகங்கள் செயல்படுத்த ரூ.6,40,000/– நிதி ஒப்பளிப்பு செய்து– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.33

நாள்: 14–11–2016
துன்முகி, ஐப்பசி 29,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:

1. மானியக் கோரிக்கை எண்.52, 2016–17 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களின் அறிவிப்பு நாள் 10–08–2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.4097/ மா.தி.ந.2.1/ 2016, நாள் 22.08.2016.

–––––––

**ஆணை:**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களால் 10.08.2016 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஏனையவற்றுடன் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:–

"பெரும்பாலான மாற்றுத் திறனாளிகள் கிராம பகுதிகளில் வாழ்ந்து வருவதாக கணக்கிடப்பட்டுள்ளது. நகர்ப்புற மாற்றுத் திறனாளிகளை விட கிராமப்புற பகுதியில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வழங்கும் பலவிதமான உதவித் திட்டங்கள் மீதான விழிப்புணர்வு போதுமானதாக இல்லை. அதிகப்படியான மாற்றுத் திறனாளிகளுக்கு தங்களின் உரிமைகள் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்புகள் இல்லை.

எனவே, மாவட்ட அளவில் தெருமுனை நாடக நிகழ்வுகள் மற்றும் சாலை விளக்கம் மூலமாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடலாம். **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** ஒரு மாவட்டத்திற்கு ஒரு

விழிப்புணர்வு நிகழ்விற்கு ரூ.20,000/– வீதம் 32 மாவட்டங்களில் தெருமுனை நாடக நிகழ்வுகள் மற்றும் சாலை விளக்க நிகழ்வுகள் நடத்திட ரூ.6,40,000/– மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.''

**2.** மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கிராமப்புறங்களில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசால் செயல்படுத்தப்படும் பலவிதமான அரசு நல உதவித் திட்டங்கள் மற்றும் அவர்களது உரிமைகள் குறித்தான விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில், மாவட்ட அளவில் தெருமுனை நாடகங்கள் மற்றும் சாலை விளக்க நிகழ்வுகள் நடத்திட, செலவினமாக ஒரு மாவட்டத்திற்கு ரூ. 20,000/–வீதம், 32 மாவட்டங்களுக்கு மொத்த செலவினமாக ரூ.6,40,000/–ஐ புதிய கணக்குத் தலைப்பின் கீழ் நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**3.** மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும்விதமாக மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, கிராமப்புறங்களில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசால் செயல்படுத்தப்படும் பலவிதமான உதவித் திட்டங்கள் மற்றும் அவர்களது உரிமைகள் குறித்தான விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில், மாவட்ட அளவில் தெருமுனை நாடகங்கள் மற்றும் சாலை விளக்க நிகழ்வுகள் நடத்திட, செலவினமாக ஒரு மாவட்டத்திற்கு ரூ.20,000/–வீதம், 32 மாவட்டங்களுக்கு மொத்த செலவினமாக ரூ.6,40,000/– (ரூபாய் ஆறு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**4.** மேலும், இத்திட்டத்தினை கீழ்காணும் விதிமுறைகளின்படி, செயல்படுத்துமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

i. மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரங்கள் அடங்கிய தெருமுனை நாடகங்கள் மற்றும் சாலை விளக்க நிகழ்வுகள் மாவட்டங்களில் நடத்தப்பட வேண்டும்.
ii. பெருவாரியான மாற்றுத் திறனாளிகள் பங்குபெற்று பயன்பெறும் விதமாக சாலை விளக்க நிகழ்வுகள் அமைதல் வேண்டும்.
iii. மாவட்ட திட்ட மேலாளர், புதுவாழ்வுத் திட்டம் அவர்களுடன் இணைந்து தெருமுனை நாடக நிகழ்வு (street play) மற்றும் சாலை விளக்க நிகழ்வு (Road Shows) நடைபெறும் இடங்கள் முடிவு செய்திட வேண்டும்.
iv. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரின் அறிவுரைப்படி, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் இத்திட்டத்தினை செயல்படுத்தலாம்.
v. தெருமுனை நாடக நிகழ்வு மற்றும் சாலை விளக்க நிகழ்வுகள் குறித்து விரிவான விளம்பரம் செய்யப்பட வேண்டும்.
vi. விளம்பர பலகைகள் ஏற்பாடு செய்வதோடல்லாமல் திட்டங்களின் விவரங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து விநியோகிக்கப்பட வேண்டும்.
vii. விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் மாற்றுத் திறனாளிகளுக்காக ஊரக வளர்ச்சித் துறை, வேலைவாய்ப்புத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரங்களும் இடம் பெற வேண்டும்.

**5.** மேலே பத்தி **3**ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**2235–**சமூகப் பாதுகாப்பும் நலனும்**–02–**சமூக நலன் **101–**மாற்றுத் திறனாளிகள் நலன்**–**I- திட்டத்தில் சேராதது–CO மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம்**–08–**விளம்பரமும் பிரச்சாரமும்**–03–**செயல்முறை விளக்கம்.

[த.தொ.கு.**2235–02–101–CO-0838**]

**6.** மேலே பத்தி**–3**ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் **2016–2017**ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு ஒதுக்கீடு செய்வதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது. **2016–17**ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதி(சந)த் துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**7.** இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்.**57531**/நிதி(சந)/**2016**, நாள் **11.11.2016** பெறப்பட்ட இசைவுடன் மற்றும் கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண்.**1140** (ஆயிரத்து நூற்று நாற்பது) உடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை**–78.**
சம்பள கணக்கு அலுவலர், சென்னை**–35.**
முதன்மை மாநில கணக்காயர், சென்னை**–18.**
முதன்மை மாநில கணக்காயர், சென்னை**–18** (பெயரில்)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள் (மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்:**
நிதி(சந/வ.செ.தி.பொது–II)த் துறை, சென்னை**–9.**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை**–9.**
மாண்புமிகு அமைச்சர்(சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை**–9.**
இ.கோ./உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.